30-06-2011

## தலைப்பு : கருத்துமுதல்வாதமும் பொருள்முதல்வாதமும்

**இத்தலைப்பில் சி. சிவசேகரம் அவர்களின் தொடக்கவுரையுடன் நடந்த கலந்துரையாடலில் உரையாடப்பட்ட கருத்துக்களின் தொடர்ச்சி..,**

சமயங்கள்; கருத்துமுதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தபோதிலும் பௌத்தமும், சீனாவின் கொன்பூசியச் சிந்தனைளும் பெரும்பாலும் பொருள்சார் விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக இவற்றில் "உலகைப் படைத்த கடவுள்" என்ற ஒன்று இல்லாமையைக் குறிப்பிடலாம்.

விஞ்ஞானத்தின் அடிப்படையாக அமைவது பெரும்பாலும் பொருள்முதல்வாதமே. ஆயினும், எல்லா விஞ்ஞானிகளும் பொருள்முதல்வாதிகளாக இருப்பதில்லை. உலகை, உலக நிகழ்வுகளை விளக்க அனுபவத்திற்கு அப்பாற்பட்ட ஒரு அறிவு பயன்படமாட்டாது.

யோகாசனம் போன்ற பயிற்சிகள் மூலம் கருத்துமுதல்வாதிகளினால் முன்வைக்கப்படும் மனோசக்தி, மனதை அறிதல், தெலிப்பதி போன்றவற்றைச் சாத்தியப்படுத்த முடிவதுடன். இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் இரசவாதத்தின் கருத்துக்களை அணுமூலக்கூறுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதன்மூலம் சாதித்துவிட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறதே போன்ற கேள்விகளுக்கு, தெலிப்பதி "மனஅலை" சார்ந்தது இதுவரை நிருபிக்கப்படாத ஒன்று எனவும் ஒருவரின் நடத்தையை வைத்து ஒருவர் பற்றிய மதிப்பீட்டை ஓரளவு மேற்றொள்ள முடிவதுடன், செயற்கையான உறக்க நிலையை ஏற்படுத்தி அவரின் வாயாலேயே உண்மையை வெளிக்கொணருதல், உடலில் ஏற்படும் (இரசாயண) மாற்றங்களை வைத்துப் பொய் கூறுவதை வெளிப்படுத்தும் கருவி என்பன விஞ்ஞான பூர்வமானவையாக உள்ளன எனவும் ஒருவர் நினைப்பதை இன்னொருவர் கூறுவது என்பது சாத்தியமற்றது எனவும் மனித மனம் விளங்கிக்கொள்வதற்கு மிகவும் சிக்கலான விடயமாகவே இன்றும் இருக்கின்றது எனவும் மாறக் கருத்துக்கள் அளிக்கப்பட்டன.

கருத்துமுதல்வாதமும் பொருள்முதல்வாதமும் பற்றிய சித்தாந்தத் தெளிவு எமக்கு எதற்காகத் தேவையென்றால், அது நாம் வாழ்வையும் நம்மைச் சூழ நடப்பவற்றையும்; புரிந்துகொள்வதற்கும் பிரச்சினைகளுக்கான சரியான காரணங்களை இனங்கண்டு அவற்றைச் சரியான வழியில் தீர்ப்பதற்குமே ஆகும்.

எடுத்துக்காட்டாக, இலங்கையின் இனப் பிரச்சினையை நோக்கினால், அதற்கான காரணத்தைத் தமிழர் அனைவரினதும் தலை விதி என்றோ அதற்கான தீர்வு இயற்கை இகந்த சக்தியால் மாத்திரமே ஏற்படுத்தப்படக்கூடியது என்றோ கருதாது, பொருள்முதல்வாத அடிப்படையில் நோக்கித் தெளிவு பெறவேண்டும்.

கருத்துமுதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் மதக் கருத்துக்கள் மனிதனை நல்வழிப்படுத்துவதனால், நாம் அவற்றை நிராகரித்துவிட்டு எவ்வாறு ஒழுக்கமான சமுதாயமொன்றைத் தோற்றுவிக்க முடியும். என்ற வினாவிற்கு, மனிதரின் சிந்தனையைத் தூண்டி, அவர்கள் இவ்வுலகில் சந்தோசமாக வாழ்வதற்கு ஒழுக்கம் எவ்வகையில் அவசியம் என விளக்காமல், அடுத்த பிறவி, மறு உலக விசாரணை, தெய்வம் நின்று கொல்லும் போன்ற பொய்மையான கருத்துக்களின் மூலம் அச்சத்தை ஊட்டியே ஒழுக்கத்தை நிலைநிறுத்த மதங்கள்; பொதுப்பட முயல்கின்றன.

பொருத்தமான சமூகக் காரணங்களுக்காக, ஒழுக்கம் பின்பற்றப்படவேண்டியதன் அவசியத்தை விளக்கி ஒழுக்கத்தை நிலைநிறுத்தல் பொருள்முதல்வாதத்தில் இயலும்.

### எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

*14 - 07 -2011*

*The Untouchable Country* -
**ஆவணப்படம்**

*21 - 07 -2011*

**இயங்கியல் பொருள்முதல்வாதம்**
- சி. கா. செந்திவேல்

*28 - 07 -2011*

**அவுஸ்திரேலியாவில் தமிழரும் தமிழர் பண்பாடும்**
- மாவை நித்தியானந்தன்



**வி. வி. வைரமுத்து (பெப்ரவரி 11, 1924 - ஜூலை 8, 1989, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்)**

இலங்கையின் மிகச்சிறந்த இசை நாடகக் கலைஞராகக் கருதப்படுபவர். இவர் அரிச்சந்திரனாகத் தோன்றி நடித்த 'மயான காண்டம்' எண்ணற்ற தடவைகள் மேடையேற்றப்பட்ட இசை நாடகமாகும். தனது இனிய குரல் வளத்தால் பாடி, உருக்கமாக வசனங்கள் பேசி நடிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளரும் திசையில் மாற்றியமைக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப் படக்காட்சியும் கலந்துரையாடலும் (14-07-2011)

" உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று பெருமிதமாகக் கூறப்படும் ஒரு நாட்டின் கொடூரமான மற்றொரு பக்கம் இது"

சாதியம் தொடர்பான இரு ஆவணப்படங்கள் திரையிடலும் கலந்துரையாடலும்.

### "The Untouchable Country"

தயாரிப்பு: தலித் மீடியா நெட்வொர்க், சென்னை
ஒளிப்பதிவு & இயக்கம்: காஞ்சனை சீனிவாசன்
தயாரிப்பு நிர்வாகி: புனித பாண்டியன்
படத்தொகுப்பு: ஜோன்ஸ்
இணை இயக்கம்: குட்டி ரேவதி

### "இது வேறு... இதிகாசம்"

தயாரிப்பு: கரிசல் & தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், சாத்தூர் கிளை
இயக்கம்: ஜா. மாதவராஜ்
ஒளிப்பதிவு: ப்ரியா கார்த்தி
படத்தொகுப்பு: சிபிசரவணன்
இணை இயக்கம்: சு. காமராஜ்

--

(திரையிடல் நேரம் 1 மணித்தியாலம்;
கலந்துரையாடல் உரை : சி.கா.செந்தில்வேல், மு. மயூரன்)

## வலை

**கட்டுநாயக்க தொழிலாளர் போராட்டமும் பொலிசின் மிருகத்தனமான தாக்குதலும்**

கட்டுநாயகாவில் தனியார் ஓய்வூதியத்திட்டத்தை எதிர்த்து தொழிற்சங்கங்கள் நடத்திய போராட்டம் பற்றிய பார்வை..

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/31

மூலம் : http://thulaa.net/home/archives/318

**ஜே.வி.பி.யின் நிலைப்பாடும் செயற்பாடும்!**

இன்றைய மக்கள் விடுதலை முன்னணியை எப்படி விளங்கிக்கொள்வது? அவர்களது இன்றைய அரசியல் மக்களைச்சார்ந்ததா?

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/32

மூலம் : http://thulaa.net/home/archives/313

**“தொடைகளுக்கு நடுவே ஒளிந்திருக்கும் நரகம்” !**

சிறுநீர் கழிக்க ஒரே ஒரு துவாரம் வைத்துவிட்டு மீதி உறுப்பு மூடப்பட்டுவிட்டது. என் கன்னித் தன்மையும், இனத்தின் கவுரவமும் காப்பாற்றப்பட்டுவிட்டது. இதற்கு, நான் செத்துப்போய் இருக்கலாம்.

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/33

மூலம் : http://www.vinavu.com/2011/07/07/desert-flower/

## மதங்களின் தோற்றம்

23-06-2011 நடைபெற்ற கலந்துரையாடலின் சுருக்கம் - வதீஸ்

முன்னைய காலத்தில் இந்தியாவில் கடவுளையும் அரசனையும் ஒன்றாக பார்க்கும் ஒரு காலகட்டம் இருந்திருக்கின்றது.

கிறீஸ்தவ சமயம் 2000ம் வருடங்களுக்கும் மேலாக இருப்பதற்கான காரணம் என்ன? உண்மையில் யேசு இறந்த பின்னர் ஒரு 30 40 வருடங்கள் வரையிலும் யாருமே அவரைப்பற்றி கதைக்கவில்லை. அவரை புதைத்த இடத்தில் சென்று பார்த்தபோது அவரது உடல் அங்கு இருந்திருக்கவில்லை அத்தோடு யேசு இறந்து 1600 வருடங்களுக்கு பின்னர்தான் பைபிள் எழுதப்பட்டதாக கூறப்படுகின்றது. யேசு ஒரு யுதராக இருந்தாம் அவர் சாதாரண அடிமட்ட மக்களோடு பழகியிருந்தார் அவர் சில புரட்சிகளும் செய்திருந்தார். யேசு இறந்து 100 வருடங்களுக்குள் கிறீஸ்தவம் மதமாக்கப்பட்டது
யேசுவை கொன்ற அரசுக்கே கிறீஸ்தவத்தை மதமாக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஏனென்றால் அரசுகள் தங்கள் சுயநலத்திற்காக மக்களால் விரும்பப்பட்ட ஒருவரை கடவுளாகவும் அவரால் முன்வைக்கப்பட்டவற்றை இணைத்து சமயமாக்கவும் வேண்டியிருந்தது

ஆரம்ப காலத்தில் மனிதன் தனனுடைய உணவுத்தேவையை பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருந்தான் அதனால் அவன் அடிமைகளாக யாரையும் வைத்திருக்கவேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனால் உற்பத்தி தேவை அதிகரிக்க அதிகரிக்க மனிதர்களை அத்தேவைகளுக்காக அடிமைப்படுத்த தொடங்கினான்

பழைய தமிழ் கடவுள்களிடம் எல்லாரிடமும் ஆயுதங்கள் இருக்கின்றது. சமயங்கள் எல்லாம் சமாதானத்தை சொன்னாலும் அந்த சமயங்களிடம் ஆயுதங்கள் இருக்கின்றது.

முகமட் நபி இறந்த பின்பு 7 வதவைகள் இருந்தார்கள் என்று நூல்களில் இருக்கின்றது.

மனிதர்கள் இயற்கையுடன் போராடித்தான் வளர்ச்சியடைந்திருக்கின்றார்கள் அங்கே பயம் ஒரு முக்கிய இடத்தினை வகித்திருந்தது. இதன் காரணமாகத்தான் பாம்பு எருது போன்றவற்றையெல்லாம் வழிபடும் முறை இருந்திருக்கிறது

அதிகாரம் அரசு என்பது தோற்றம் பெறும்போது மதம் அங்கே முக்கியமாக பார்க்கப்படும். இல்லாத ஒன்றை மக்கள் மதிக்கின்ற போது அதை அரசுகள் தனக்கு சாதகமாக்கிக்கொள்ளும் ஆகவே மதங்களின் தோற்றங்களுக்கு அரசுகள் மிகமுக்கியமானதொன்றாக இருந்திருக்கின்றன. மக்கள் ஒரு அறியாமைக்குள் சிக்கியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு இல்லாத ஒருவரிடம் அல்லது ஒரு கற்பனை பாத்திரத்திடம் முறையிடலம் அது அவர்களை பாதிக்காது னோல் அரசனிடமோ அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களிடமோ முறையிட முடியாது. இதுதான் 2000 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுக்கொண்டிருக்கும் ஆளும் வர்க்கத்தின் திணிப்புக்கள்.

மதங்களின் தோற்றத்தினை இரண்டு விடயங்களாக பார்க்கலாம் 1.பயத்தினால் தோற்றம் பெற்றவை 2.இரண்டாவது முன்னோர் வழிபாடு. நாடோடி இனமாக இருந்தவர்கள்தான் இயற்கையினை தெய்வங்களாக வழிபட்டிருக்கின்றார்கள்.

ஸ்கன்டிநேவிய நாடுகளில் இருந்தவர்கள் இயற்கையினை தெய்வங்களாக வழிபட்டார்கள் ஆனால் எகிப்து போன்ற நாடுகளில் பிரமிட்டுகளோடு தொடர்புபட்டவயை வழிபட்டார்கள்
நடுகல் வழிபாடு தொடர்சியாக அசைந்து கொண்டிருக்ககூடிய சமுதாயத்திற்கு வாய்ப்பில்லை.

ஒரு சமயம் இன்னொரு சமயத்தை விழுங்குவதற்கான உதாரணங்களை நாம் தற்போது எங்களுடைய நாட்டிலேயே பார்க்கலாம். அதாவது விகாரைகளுக்குள் கண்ணகிக்கு ஒரு முக்கிய இடம் வழங்கப்பட்டிருக்கின்றதுஅத்தோடு பிள்ளையாரையும் குறிப்படலாம்

இந்தியாவில் கடவுள் இல்லாத இரண்டு சமயங்கள் இருந்தது. 1. புத்த சமயம் 2. சமண சமயம்.

சீனாவில் பெரும் தெய்வங்களே இருந்திருக்கவில்லை சிறு சிறு தெய்வ வழிபாடு இருந்திருக்கின்றது. அத்தோடு முன்னோர் வழிபாடும் இருந்திருக்கின்றது. அத்தோடு சீனாவுக்குள் இந்து சமயம் போகமுன்னர் புத்த சமயம் போய்விட்டது இதன் காரணமாக கிழக்காசியாவில் உறுதியில்லா ஒரு சமயம் பரவக்காரணமாகியது. இங்குள்ள சமயங்களின் கடவுள்கள் சாவ வல்லமை பொருந்தியனவாக இருக்காது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aayanaham.org